258, எம் வின்சென்ட்
பெரேரா மாவத்தை

கொழும்பு 14

0114700800

# யூனிலீவர் நிறுவனம் 'மனிதநேய ஒன்றிணைவு' அவசரகால நிவாரண முயற்சியுடன் கைகோர்த்துள்ளது

**கொழும்பு, September 02 2022:** நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள பின்தங்கிய குடும்பங்களுக்கு அவசர கால நிவாரணம் வழங்குவதற்காக, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டெட், ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, இதற்குச் செயல்வடிவம் கொடுக்கும் கூட்டாளர்களான சர்வோதய சிரமதான சங்கம், சுயாதீன கணக்காய்வு நிறுவனமான PwC Sri Lanka, மற்றும் CBL குழுமம், Citi, சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி மற்றும் ஹுவாவே டெக்னோலொஜிஸ் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கின்ற 'மனிதநேய ஒன்றிணைவு' என்ற மனிதாபிமான நிகழ்ச்சித்திட்டத்துடன் யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனமும் அண்மையில் கைகோர்த்துள்ளது. யூனிலீவர் நிறுவனம் இச்செயற்திட்டத்திற்கு பணமாகவும், தனது முதன்மை வர்த்தகநாமங்களான சன்லைட் மற்றும் லை∴ப்போய் ஆகியவற்றின் சார்பில் பொருளாகவும் நன்கொடையை வழங்கியுள்ளது.

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளையில், இலங்கையிலுள்ள 200,000 பின்தங்கிய குடும்பங்களுக்கு உதவி செய்வதே அவசர கால நிவாரணத்தின் நோக்கமாகும். இந்த நிவாரணம் தற்போது நாட்டிலுள்ள அனைத்து 25 மாவட்டங்களிலும் விநியோகிக்கப்பட்டு வருவதுடன், இன்றுவரை 100,000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. திறன்மிக்க பொருளாதார மீட்புத் திட்டத்தின் மூலம் நாட்டில் நிலையான வகையில் நன்மைபயக்கும் முறைமையொன்று செயல்படுத்தப்படும் வரை, அவசரகால நிவாரணம் வழங்குவதற்கான முக்கியமான தேவையை நிவர்த்தி செய்ய, அரிசி, பருப்பு மற்றும் பல உணவுப் பொருட்களை வாங்குவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது.

**யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தனிப்பட்ட பராமரிப்பு, அழகு மற்றும் நல்வாழ்வு தயாரிப்புக்களுக்கான சந்தைப்படுத்தல் பணிப்பாளரான நிலுஷி ஜயதிலக** அவர்கள் இந்த செயற்திட்டம் குறித்து தனது கருத்துக்களைத் தெரிவிக்கையில், *''எமது சக இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் முன்னெப்போதும் முகங்கொடுத்திராத சவால்களைப் பார்க்கையில் அது எங்களை ஆழமாக சிந்தித்து, செயற்படச் செய்துள்ளது. யூனிலீவர் நிறுவனத்தில், நிலைபேறான வாழ்வை அனைவருக்கும் பொதுவானதாக மாற்றுவதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். பல் நோக்கம் கொண்ட எமது வர்த்தகநாமங்கள், எமது மக்களுக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்குவதன் மூலம் நிலைபேறான இலங்கையை கட்டியெழுப்புவதற்கு உதவுவதை எப்போதும் ஒரு பொறுப்பாகவே கருதுகின்றன. வர்த்தக நிறுவனங்களாக நாம் அனைவரும் நமது பங்கை ஆற்றி வருகிறோம் என்றாலும், இன்று நாம் எதிர்கொள்ளும் தேசிய நெருக்கடியானது, தனி ஒரு வர்த்தகநாமத்தால் அல்லது தனி ஒரு நிறுவனத்தால் மேற்கொள்ளக்கூடிய நற்பயனை விடவும் பாரிய தேவைப்பாடாகக் காணப்படுகின்றது. அதனாலேயே கூட்டு வலு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மனிதநேய ஒன்றிணைவு செயற்திட்டத்தை ஆரம்பித்ததற்காக டயலொக் நிறுவனம், சர்வோதய சங்கம் மற்றும் பிற ஸ்தாபக பங்காளர்கள், எமது சக இலங்கை மக்களுக்கு பாரிய நற்பயனை ஏற்படுத்தவல்ல கூட்டு வலுவை ஒன்றிணைக்கும் ஒரு தளத்தை உருவாக்குவதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்,''* என்று குறிப்பிட்டார்.

இது தொடர்பில் **டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும தலைமை அதிகாரியான நவீன் பீரிஸ்** அவர்கள் கருத்து வெளியிடுகையில், *''17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கை மக்களுக்கு நம்பகமான டிஜிட்டல் துணையாக, அவசர நிலைமையை நாம் உணர்ந்து, அவசர தேவைகளைக் கொண்டுள்ளவர்களுக்கு உதவ முன்வந்துள்ளோம். யூனிலீவர் போன்ற ஒரு நிறுவனத்துடன் அணி சேர்வது மிகவும் நன்மை பயக்கும் என்பதுடன், வளமானதாக இருக்கும். ஏனெனில் நம் நாட்டில் நிலவி வரும் பிரச்சனையைத் தணிக்க நாம்*

*ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். ஒத்த எண்ணம் கொண்ட நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவது, இலங்கை முழுவதிலும் உள்ள குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் போது நம் அனைவருக்கும் மிகுந்த நன்றியுணர்வைத் தரும்,''* என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் **சர்வோதய சிரமதான சங்கத்தின் பதில் நிறைவேற்று அதிகார பணிப்பாளரான கமல் கமகே** அவர்கள் கருத்து வெளியிடுகையில், ''*தக்க தருணத்தில் முன்னெடுக்கப்படுகின்ற இந்த மனிதாபிமான முயற்சியில் யூனிலீவர் நிறுவனம் எங்களுடன் இணைந்து, இதில் அங்கம் வகிப்பதையிட்டு சர்வோதய இயக்கம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றது. ஒரு சமூக சேவை அமைப்பாக, எமது ஒத்த எண்ணம் கொண்ட கூட்டாளர்களுடன் ஐக்கியமாக இணைந்து பணியாற்றுவது, இந்த கடினமான காலகட்டத்தை கடந்து செல்லும் நம் மக்களின் மன அழுத்தத்தை குறைக்க உதவும். இம்முயற்சியில் பங்குகொண்ட யூனிலீவர் நிறுவனத்திற்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் இது எங்கள் செயற்திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் என்று நாங்கள் திடமாக நம்புகிறோம்,''* என்று குறிப்பிட்டார்.

கடந்த 84 ஆண்டுகளில், யூனிலீவர் நிறுவனம் இலங்கை சமூகத்தில் ஆழமாக வேரூன்றி, உண்மையான இலங்கை வாழ்க்கை முறையைப் பேணிப் பாதுகாத்து, அதனை வளர்க்கும் பின்னணியைப் பண்படுத்தி வந்துள்ளது. இது நாட்டின் மிகப்பெரிய விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் நிறுவனங்களில் ஒன்றாகும். அத்துடன் ஹொரணை என்ற இடத்தில் உள்ள அதன் உற்பத்தி தொழிற்சாலையிலும், உள்நாட்டிலுள்ள மூன்றாம் தரப்பு உற்பத்தித் தளங்களிலும் அதன் 96% தயாரிப்புகளை கடுமையான உற்பத்தித் தராதரங்களுடன் உற்பத்தி செய்து வருகிறது. நிறுவனத்தின் தயாரிப்புக்கள் வரிசையில் சன்லைட், சிக்னல், லை∴ப்போய், நோர், விம் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய 30 சந்தை முன்னணி வர்த்தகநாமங்கள் உள்ளடக்கியுள்ளதுடன், இதன் மூலம் தினந்தோறும் 21 மில்லியன் இலங்கை மக்களின் வாழ்வும் மேம்பட்டு வருகின்றது. தான் தொழிற்பட்டு வருகின்ற சமூகங்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் அதன் முயற்சிகளில் இந்நிறுவனம் தொடர்ந்தும் முன்னின்று செயற்படும்.